**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 32/2021**

**Prosecution Witness 3 (LW 2 )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ஜோதி | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | ராமராஜ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2024

( 1, 2, 9 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் தரப்பில் பி.என்.எஸ்.எஸ் 355 ன் கீழ் மனு அனுமதிக்கபட்டது)

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

1, 2, 9 எ.த.கு.வி:

| | |
|---|---|
| கேள்வி | ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் நீங்கள் கொடுத்த வாக்குமூலத்தில் சித்ராவுக்கும், செல்லப்பாண்டிக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டு, சண்டை சச்சரவுடன் வாழ்ந்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | சித்ரா , கணவருடன் கோபித்து கொண்டு பெற்றோர் வீட்டிற்கு போய் விடுவார் என்றும் நாங்கள் பேசி கணவருடன் சேர்த்து வைப்போம் என்ற சங்கதிகளையும் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | 23.02.2020 ந் தேதி நீங்களும் , உங்கள் உறவினர்களும் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்ற சங்கதிகளையும் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |

| | |
|---|---|
| | .2. |
| கேள்வி | கூலிப்படையினருக்கு ரூபாய் 5,00,000/-த்தை மகாராஜன் கொடுத்ததாக ஆய்வாளர் உங்கள் கணவரிடம் கூறினார் என்ற சங்கதியையும் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | தேனி ராஜா லாட்ஜில் அன்புகணேஷ் , செந்தில் ஆகியோர்களை கைது செய்துவிட்டதாக ஆய்வாளர் கூறியதையும் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | நீங்களும், உங்கள் உறவினர்களும் , கணவரும் ராமநாட்டிற்கு சென்றோம் என்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | நீங்களும், உங்கள் கணவர் , கங்கா , ஈஸ்வரி , செல்வி ஆகியோர்களம் உச்சிப்புளிக்கு சென்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | உச்சிப்புளி பள்ளிவாசலில் இருந்து கொண்டு உங்கள் கணவர் கடமலைக்குண்டு ஆய்வாளரிடம் கைபேசியில் பேசினார் என்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | ஆய்வாளர் அடையாளம் ஒன்றை சொன்னார் நாங்கள் அந்த இடத்திற்கு போனோம் என்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | அங்கு போனோம் , ஆய்வாளர் நான்கு நபர்களை அழைத்து வந்தார் என்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | தினேஷ் , அன்புகணேஷ், கிஷோர் , செந்தில் ஆகியோர்கள் அங்கு இருந்த சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியை கடமலைக்குண்டில் இருந்து உச்சிப்புளிக்கு அழைத்து வந்துவிட்டதாக ஆய்வாளர் சென்னார் என்பதையும் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |

| | |
|---|---|
| | .3. |
| கேள்வி | மேற்படி நான்கு பேரும் செல்லப்பாண்டியை கொலை செய்து விட்டதாக ஆய்வாளர் சொன்னதாக உள்ள சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | சொல்லவில்லை. |
| கேள்வி | கிஷோர் என்பவர் நாகராஜ் என்பவரை கைபேசியில் தொடர்பு கொண்டு சர்க்கரையும் , பெட்ரோலும் வாங்கி வர சொன்னதாகவும், நாகராஜ் வாங்கி கொண்டு வந்து கொடுத்ததாகவும், கிஷோர் , நாகராஜீம் , செல்லப்பாண்டியின் பிரேதத்தை புதைக்க குழி வெட்டியதாகவும், பிரேதத்தை குழியில் போட்டு சர்க்கரையை போட்டு, பெட்ரோலை ஊற்றி எறித்து விட்டதாகவும், பிறகு குழியை மூடிவிட்டதாகவும் , கிஷோர் சொன்னதாக ஆய்வாளர் சொன்னதை சங்கதியை ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம் |
| கேள்வி | நீங்கள் அங்கு போகும் போது காவல் ஆய்வாளர், மருத்துவர் , தாசில்தார் வந்தார்கள் என்றும், ஜே.சி.பி வண்டியை வர வழைத்தனர் என்ற சங்கதியையும் ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | மருத்துவர் வந்து எழும்பு துண்டுகளை எடுத்துக் கொண்டார் என்று நீங்கள் சொல்லிய விபரத்தை ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் உங்களை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால்? |
| பதில் | 2 முறை விசாரித்தார்கள். |
| கேள்வி | 2 முறை உங்களை போலீசார் விசாரிக்கும் போது ராஜேந்திரன் காவல் நிலையத்திற்கு வந்தார் என்ற விபரத்தை நீங்கள் சொன்னீர்களா என்றால் ? |
| பதில் | போலீசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை. |
| கேள்வி | நீங்களும் , உங்கள் உறவினர்களும் கடமலைக்குண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்று போலீசார் விசாரிக்கும் போது கூறவில்லை என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | உச்சிப்புளி பள்ளிவாசலில் நின்று கொண்டு உங்கள் கணவர் கடமலைக்குண்டு ஆய்வாளரிடம் கைபேசியில் பேசினார் என்று போலீசார் விசாரிக்கும் போது கூறவில்லை என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |

| | |
|---|---|
| | .4. |
| கேள்வி | ஆய்வாளர் அடையாளம் ஒன்றை சொன்னார் நாங்கள் அந்த இடத்திற்கு போனோம் என்ற சங்கதியை போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | தலையில்லாமல் , எழும்பு கூட்டை பார்த்ததாக நீங்கள் போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | நீங்கள் ஊர் பெரியோர்களை கூட்டி போய் சித்ராவிடம் , செல்லப்பாண்டி எங்க என்று கேட்டீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | செல்லப்பாண்டி அடிக்கடி கேரளாவிற்கு வேலைக்கு செல்வார் என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | ஒரு சமயம் உடனடியாக வந்து விடுவார், ஒரு சில சமயம் பல நாட்கள் தங்கி வருவார் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்களுக்கு மகாராஜன் (1வது எதிரி) விஏஓ முன்பு ஆஜரான சங்கதி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | நீங்கள் பிரேதத்தை பார்ப்பதற்கு முன்பு நீங்கள் சொன்ன கிஷோர்,. அன்புகணேஷ், செந்தில், தினேஷ் ஆகியோர்களின் பெயர்கள் உங்களுக்கு தெரியாது என்றால்? |
| பதில் | போலீசார் சொன்ன பிறகு தான் தெரியும். அதற்கு முன்பு நான் அவர்களை பார்த்தது இல்லை. |
| கேள்வி | நீங்கள் அதற்கு பின்பு அந்த 4 பேரை பார்த்தது இல்லை என்றால்? |
| பதில் | இதற்கு முன்பு இங்கு விசாரித்த போது பார்த்தேன். |
| கேள்வி | நீங்கள் அப்படி சாட்சி சொல்லும் போது அவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | வழக்கு புகாரை யார் எழுதினார்கள்? |
| பதில் | என்னுடைய கணவர் ராமராஜ் எழுதினார். |
| கேள்வி | அதில் சாட்சி கையெழுத்து யாரும் போட்டார்களா? |
| பதில் | ஒருத்தரும் செய்யவில்லை. |

| | |
|---|---|
| | .5. |
| கேள்வி | போலீசாரிடம் நீங்கள் புகாரை கொடுக்கும் போது அங்கு யார் இருந்தார்கள் ? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | புகார் கொடுக்கும் போது நேரம் என்ன? |
| பதில் | காலை 10.00 மணி இருக்கும். |
| கேள்வி | நீங்கள் உச்சிப்புளிக்கு போகும் போது நேரம் என்ன? |
| பதில் | காலை 10.00 மணி இருக்கும். |
| கேள்வி | உச்சிப்புளி பள்ளிவாசலை சுற்றி எத்தனை வீடுகள் இருந்தன ? |
| பதில் | சுமார் 10 வீடுகள். |
| கேள்வி | நீங்கள் அங்கு போகும் போது மருத்துவர், தாசில்தார் , ஆய்வாளர் ஆகியோர்கள் அங்கு இ ருந்தார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் போய் பாரக்கும் போது ஜே.சி.பி யை வைத்து பிணத்தை தோண்டி எடுத்து வெளியே வைத்து இருந்தார்கள் என்றால்? |
| பதில் | இல்லை. நாங்கள் சென்ற பிறகு தான் தோண்டினார்கள். |
| கேள்வி | அப்படி தோண்டி முடிக்க எவ்வளவு நேரம் ஆனது? |
| பதில் | சுமார் 10 நிமிடங்கள் இருக்கும். |
| கேள்வி | பிணம் முழுமையாக அழுகிய நிலையில் இருந்தது என்றால் ? |
| பதில் | முழுமையாக இல்லை. |
| கேள்வி | முழுமையாக இல்லை என்று சொன்னால் எழும்பு கூடு மட்டும் இருந்ததா என்றால்? |
| பதில் | எழும்பு கூடு இருந்தது. நெஞ்சு பகுதி அழுகி இருந்தது. |
| கேள்வி | போலீசார் அதை பார்த்து குறித்து கொண்டார்களா என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | தாசில்தார் அங்கு உங்களை விசாரித்தாரா என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | அங்கு வைத்து உங்களிடம் ஏதாவது எழுதி , கையெழுத்து வாங்கினார்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | இந்த வழக்கு விசயமாக என்றாவது உங்களிடம் விசாரித்து யாராவது , எங்காவது வைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| | .6. |
| கேள்வி | நீங்கள் புகார் கொடுக்க செல்லும் போது உங்களிடம் போலீசார் தனிப்பட்ட முறையில் விசாரித்து வாக்குமூலம் ஏதும் வாங்கினார்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | செல்லப்பாண்டி , ஆண்டிபட்டி ராணி என்பவருடன் தொடர்பில் இருந்தார் என்றால் ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | ராணி என்பவருடன் தொடர்பில் இருந்ததால் ராணியின் கணவருக்கும், செல்லப்பாண்டிக்கும் இடையே விரோதம் இருந்து வந்தது என்றால் ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | உங்கள் வீடு பொது சொத்து பாகப்பிரிவினை செய்யபடவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பொது சொத்து என்பது தோப்பு, காடு , வீடுகள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சொத்து பிரிப்பது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடத்தபட்டது என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | சொத்து பிரிப்பது பிரச்சனை இருந்தது சித்ராவையும் , அவரது குடும்பத்தினரையும் சிறையில் தள்ளிவிட்டு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் கொடுக்கபட்டுள்ளது என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| 3 வது எ.த.கு.வி | |
| கேள்வி | நீங்கள் போலீசார் விசாரணையின் போது தான் கொலை எப்படி நடந்ததாக போலீசார் சொல்லி தான் தெரிந்து கொண்டீர்கள் என்ாறல்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | செல்லப்பாண்டிக்கு காவல் நிலையத்தில் பல வழக்குகளும், அது சம்பந்தமாக பல எதிரிகள் இருக்கிறார்கள் என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | ஆய்வாளர் உங்கள் கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்ன பிறகு , உங்கள் கணவர் சொல்லி தான் சங்கதிகள் தெரியும் என்றால் ? |
| பதில் | சரிதான். |

மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.09.2024 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

(ஓம்.எஸ்.கோபிநாதன் )
கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
20.09.2024.